©
தமிழ்நாடு அரசு
2011

கையெழுத்துத் தொடர்

# நிதித் (ஓய்வூதியம்) துறை

**அரசாணை எண்:42, நாள் : 07.02.2011**

*(தை–24, திருவள்ளுவர் ஆண்டு 2042)*

ஓய்வூதியம் – ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் – கூடுதல் ஓய்வூதியம் மற்றும் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை:**

பல்வேறு ஓய்வூதியதாரர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசிடம் தொடர்ந்து வைத்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவற்றில் முக்கிய கோரிக்கையான, மத்திய அரசு வழங்குவதுபோல 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதுக்கு ஏற்ப, அடிப்படை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தில் 20 முதல் 100 சதவீதம் கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, அதனை ஏற்பதென அரசு முடிவெடுத்துள்ளது.

2. அதன்படி, 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் |
|---|---|---|
| 1 | 80 முதல் 84 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20% |
| 2 | 85 முதல் 89 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30% |
| 3 | 90 முதல் 94 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40% |
| 4 | 95 முதல் 99 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50% |
| 5 | 100 மற்றும் அதற்கு மேல் | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100% |

அடிப்படை ஓய்வூதியம் என்பது ஓய்வூதியத்தை தொகுத்து பெறுவதற்கு முன்னதான (before commutation) முழு ஓய்வூதியத்தை குறிப்பதாகும்.

3. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் ஓய்வூதியத்தை / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்பட வேண்டும்.

| வ.எண். | விவரம் |
|---|---|
| 1 | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் தனியே காண்பிக்கப்பட வேண்டும். |
| 2 | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் அகவிலைப் படி கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| 3 | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் 1.1.2011 முதல் பணப் பயனுடன் வழங்கப்பட வேண்டும். |
| 4 | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் 80 / 85 / 90 / 95 / 100 வயதை நிறைவு செய்யும் மாதத்தின் முதல் நாள் முதலோ அல்லது 1.1.2011 அன்றோ இதில் எது பின்னரோ, அன்று முதல் கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். |

4. இவ்வாணை கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தும்.

(i) அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள்

(ii) அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி மன்ற கல்வி நிறுவனங்களின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள்

(iii) உள்ளாட்சி மன்றங்களின் ஏனைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

(iv) பல்கலைக்கழக மானியக் குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதத்தின் கீழ் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

5. ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரரின் வயதை சரிபார்ப்பதற்கு ஓய்வூதிய கொடுப்பாணை அடிப்படை ஆவணமாக இருக்க வேண்டும். ஓய்வூதிய கொடுப்பாணை இல்லாத நேர்வுகள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பாணையில் வயது குறித்தான பதிவுகள் இல்லாத நிலையில், 80 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தங்களின் வயதினை நிரூபிக்க, கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு ஆவணத்தை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1. மத்திய வருமான வரி அலுவலகத்தால் வழங்கப்படும் நிலையான கணக்கு எண்ணிற்கான அட்டை (Permanent Account Number – PAN Card)
2. பள்ளி இறுதித் தேர்வு தேர்ச்சி சான்றிதழ்
3. கடவுச் சீட்டு (Passport)
4. ஓட்டுநர் உரிமம் (வயது குறித்த கலம் நிரப்பப்பட்டிருந்தால்)
5. இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை

6. மேற்காணும் ஆவணங்களில் ஒன்றை ஓய்வூதியதாரர் மற்றம் குடும்ப ஓய்வூதியதாரர் சமர்ப்பிக்கும் நேர்வில், ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர் தொடர்பாக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதிய முன்மொழிவினை அனுப்பி வைத்த

அலுவலகத்திற்கு அனுப்பி, அங்குள்ள ஆவணங்களிலிருந்து ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரரின் வயதினை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கு உறுதி செய்திட வேண்டும். குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்த வரையில், அவர்களின் குடும்ப ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் செய்திடும் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில் உள்ள விண்ணப்ப படிவம்– 14–லிருந்து, அவர்களின் வயதை உறுதி செய்திடலாம். அவ்வாறு உறுதி செய்திடும் வரையில் தற்காலிகமாக கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னர், கூடுதல் ஓய்வூதியத்தை / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை நிரந்தரமாக வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் தற்காலிக கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது குறித்த ஆவணத்தை சமர்ப்பித்த நாளிலிருந்து 6 மாதமோ அல்லது 30.9.2011 வரையிலோ, இதில் எது பின்னரோ அது வரையில் வழங்கப்பட வேண்டும். அதற்குள்ளாக ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரரின் வயது குறித்து உறுதி செய்யப்பட வேண்டும்.

7. ஓய்வூதியம் வழங்கும் அலுவலரே கூடுதல் ஓய்வூதியத்தை/ கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை, ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரரின் வயதை உறுதி செய்த பின்னர் வழங்கலாம். இதற்கென தனியே மாநிலக் கணக்காயரின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை.

8. பொதுத் துறை வங்கிகளைப் பொறுத்தமட்டில், மேற்காணும் நடைமுறையைப் பின்பற்றி அவ்வங்கிகளே கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தை வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் விகிதாச்சாரத்திற்கிணங்க பிரித்து வழங்கப்பட வேண்டும்.

10. மாநில நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியமானது, முறையே, கோரிக்கை எண்.50ன் கீழ் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

<u>கூடுதல் ஓய்வூதியம்:-</u>

| | |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்– 01. சிவில்<br>101.வயது முதிர்வு– பணி ஓய்வுக்கால படிகள்– I திட்டத்தில் சேராதது – AO<br>தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்களில் 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் –27. ஓய்வூதியங்கள் – 01 அடிப்படை ஓய்வூதியம்<br>( த.தொ.கு. 2071 01 101 AO 2711) | 2071. Pension and other Retirement Benefits - 01. Civil- 101.Super-annuation and other Retirement Allowances- I Non - Plan - AO<br>Additional Pension to Tamil Nadu Government Pensioners aged above 80 years –27. Pensions – 01 Basic pension<br>( D.P.Code. 2071 01 101 AO 2711) |

<u>கூடுதல் குடும்ப ஓய்வூதியம்:-</u>

| | |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்- 01. சிவில் 105.குடும்ப ஓய்வூதியங்கள் - I திட்டத்தில் சேராதது - AH தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்களில் 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கூடுதல் குடும்ப ஓய்வூதியம் -<br>27. ஓய்வூதியங்கள்- 01 அடிப்படை ஓய்வூதியம்<br>( த.தொ.கு. 2071 01 105 AH 2717) | 2071. Pension and other Retirement Benefits - 01. Civil- 105.Family Pensions- I Non - Plan - AH Additional Family Pension to Tamil Nadu Government Pensioners aged above 80 years -27. Pensions - 01 Basic pension<br>( D.P.Code. 2071 01 105 AH 2717) |

11. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கணக்கு வைத்துவரும் நிதி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், இந்த செலவு அந்தந்த நிதிகளிலிருந்து செய்யப்பட வேண்டும்.

12. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" திட்டமாகும். இச்செலவினம் சட்ட மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு 2010-2011ம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் தனியே சேர்க்கப்படும்.

13. இவ்விரு புதிய கணக்குத் தலைப்புகளுக்கு மாநிலக் கணக்காயர் மதிப்பீடு, கணக்கிணக்கம் மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

14. இந்த ஆணை கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1983 (ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று) படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை-600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை-600 032.
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், 378, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை-600 018. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை-600 018.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-600 018.

மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.600 006.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்/ வேலூர் / தூத்துக்குடி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

<u>நகல் பெறுநர்</u>:
நிதி (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு– பொது I/ வரவு செலவு– பொது II / வரவு செலவு–பல்வகை / பொது)த் துறை, சென்னை–9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை–600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில் நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்)
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் – ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006. மூலமாக.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், எண். 70, மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12,அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை– 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் நல சங்கம், எண் 38–பி, முதல் பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண் 158, பெல்ஸ் சாலை, சென்னை–600 005.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்